பக்கங்கள்: ஆறு

Registred as a Newspaper

**A/L - 91**
கணக்கியல்
திரு. மரியதாஸ்
பொருளியல்
திரு. லோகசிங்கம்
வர்த்தகம்
திரு. தேவா
அளவையியல்
திரு. விக்கி
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.


# உதயன்


விலை ரூ2/50



**O/L - 1989**
**Day Class**
திங்கள் — வெள்ளி
[காலை 8.00 - பி.ப 1.00
மணி வரை
[நடைபெறுகின்றது.]
★ முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்
★ முழுப்பாடத்திட்டத்திலும் விரிவான மீட்டல், வினு - விடை வகுப்பு
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை.



சுடர்: 4 சுக்கில ஹு சித்திரை மீ 28 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 05 (11 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-132


## வடக்கு - கிழக்கு இணைப்புச் சம்பந்தமான

# சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைக்க ஆலோசனை

## ஜனாதிபதியின் அறிவிப்பு வரலாம்

கொழும்பு, மே 11

வடக்கு - கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறிய வருகிறது.

இது சம்பந்தமான அறிவித்தலை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ வெளியிடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிடவிருப்பதாக அரசு வட்டாரங்களை ஆதாரங்காட்டி யு. என். ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

வருகிற ஜுலையில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது தெரிந்ததே. [அ-எ]

## நான்கு மாதங்களில் 2,000 பேர் கொலை!

கொழும்பு, மே 11

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2 ஆயிரத்துக்கு அதிகமான கொலைகள் இடம்பெற்றன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

முதல் மூன்று மாதங்களில் 1,591 கொலைகள் இடம் பெற்றன. இவற்றில் 605 கொலைகள் அரசியல் நோக்கங்களுக்காகச் செய்யப்பட்டவை என அடையாளம் காணப்பட்டது.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் சிங்களவர்:

முதல் மூன்று மாதங்களில் தினமும் சராசரி 17 பேர் வீதம் கொல்லப்பட்டனர்.

இம்மாதத்தின் [மே] முதல் எட்டு தினங்களில் 60க்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். (ஒ-எ)

## சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் சுடப்பட்டு மரணம்

யாழ்ப்பாணம், மே 11

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் செல்வன் எஸ். ரி. அகிலன் (வயது 19) நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முரசொலிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வத்தின் ஏக புதல்வரான இவரது உடல் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக பிரவுண் வீதிச் சந்தியில் இருந்து மீட்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 6 மணி அளவில் யாழ். கோவில் வீதியில் உள்ள இவரது வீட்டுக்குக் கார் ஒன்றில் நான்கு இளைஞர்கள் வந்தனர். மூன்று இளைஞர்கள் கீழே நின்றனர். ஒருவர் இவர் தங்கி இருந்த மேல் வீட்டுக்கு ஏறி வந்தார். கீழே நின்றவர்களில் ஒருவரிடம் இருந்த கடதாசியில் துப்பாக்கி ஒன்று சுற்றி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வட, கிழக்கு கிராமங்களில் 20 வைத்திய நிலையங்கள்

### அகதிகளுக்கான ஐ. நா. நிறுவனம் நிறுவும்

யாழ்ப்பாணம், மே 11

வட-கிழக்கு மாகாணத்தில் 20 பின்தங்கிய கிராமங்களில் கிராமிய வைத்திய நிலையங்களை அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் நிறுவவிருக்கிறது.

பின்தங்கிய பிரதேச மக்களின் சுகாதார சேவைகளை பூர்த்தி செய்யவும், மலேரியா போன்ற தொற்றுநோய்த் தடுப்பு வேலைகளை மேற்கொள்ளவும் இக்கிராமிய வைத்திய நிலையங்கள் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் அனுமதி பெற்றே இந் நிலையங்களை ஸ்தானிகராலயம் நிறுவவிருக்கிறது.

மன்னாரில் ஐந்து நிலையங்களையும், வவுனியாவில் மூன்று, யாழ்ப்பாணத்தில் நான்கு, திருகோணமலையில் நான்கு, கிளிநொச்சியில் நான்கு என்ற அடிப்படையில் நிறுவவிருக்கிறது.

மேற்படி நிலையங்கள் அமைக்கும் இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றன. சில நிலையங்களின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-3)

### வவுனியாவுக்கு அப்பால் சம்பவம்:

## யாழ் வந்த வாகனங்களில் கொள்ளையிட முயற்சி

### லொறிச் சாரதியினுல் முறியடிப்பு

யாழ்ப்பாணம், மே 10

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் வாகனங்கள் வவுனியாவுக்கு அப்பால் வீதிக்கு குறுக்கே கட்டைகள் போடப்பட்டு கொள்ளையிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் செவ்வாயன்று நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து புறப்பட்ட லொறிகள், தனியார் பஸ்கள் ஒன்றன் பின் ஒன்ருக வரும்போது வவுனியாவுக்கு அப்பால் வீதிக்குக் குறுக்கே மரக்கட்டைகள் போடப்பட்டு இருந்தன. முன்வந்த லொறிச்சாரதியின் சாதுரியத்தால் கட்டைகள் தள்ளப்பட்டதால் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது. (ஒ-3)

## யாழ்ப்பாணத்தில் பயின்ற டாக்டர்களுக்கு ஜூனில் நியமனம்

கொழும்பு, மே 11

யாழ்ப்பாணம், பேராதனை, ருகுணு மருத்துவ பீடங்களில் பயின்று சித்தி எய்திய டாக்டர்களுக்கு வருகிற ஜூன் முதலாம் திகதியில் இருந்து தற்காலிக நியமனங்கள் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதேபோன்று வெளி நாடுகளில் பயின்று வைத்தியப் பட்டம் பெற்று திரும்பிய இலங்கையருக்கும் வருகிற ஜூன் முதலாம் திகதி முதல் தற்காலிக நியமனங்கள் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்டார்

அம்பாறை, மே 11

கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள அச்சக நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குநர் ஒருவர் நிந்தவூரில் வைத்து கடத்திச் செல்லப்பட்டார்.

கடத்தப்பட்டவர் ரி. எ. மஜீத் (வயது 35) இரண்டு பிள்ளைகளின் தந்தை. [இ-14]

## முச்சந்தி முரளி



அப்ப அகதிகள் தொடர்ந்து அங்கதான் இருப்பினமோ...!

## கைதடியில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், மே 11

கைதடியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிரனேட் வீச்சை அடுத்து அப்பகுதியில் தேடுதல் இடம்பெற்றது.

இதனையடுத்து அவ்வழியால் வந்த வாகனங்கள் பலத்த சோதனைக்கு உள்ளாயின. பயணிகள்இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். (ஒ-3-72)

### ●கொலையுண்ட ●காணமற்போன ●கைதான

## பல்கலைக்கழக மாணவர்கள் குறித்து விசாரணை நடத்த நீதியரசர் தலைமையில் குழு

கொழும்பு, மே 11

இதுகாலவரை காணமற்போன, கொலையுண்ட மற்றும் கைதான பல்கலைக்கழக மாணவர்கள் பற்றி விசாரணை நடத்த ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் விசேட குழு ஒன்றை அமைக்க அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

வருகிற 17ஆம் திகதி இக்குழு நியமனம் செய்யப்படுவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று உயர்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குழு இயங்கத் தொடங்கிய தினத்தில் இருந்து ஒரு மாத காலத்தினுள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

### பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டன

கொழும்பு, மே 11

நாட்டின் தென் பகுதியிலுள்ள பல்கலைக் கழகங்கள் நேற்று திறக்கப்பட்டன. [ஒ]

## வித்தியின் உருவப்படம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மே 11

முன்னுள் உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் உருவப்படம் யாழ். பல்கலைக் கழக பொது அறையில் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டது

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவால் அமரரின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது.

உபவேந்தர், பீடாதிபதிகள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகியோர் உருவப்படத்துக்கு மாலைஅணிவித்தார்கள்.

தொடர்ந்து விசேட கூட்டமும் நடைபெற்றது. (ஒ-3)

## சமாதான முயற்சியைக் குழப்பாதீர்; அரசாங்கத்தின் வேண்டுகோள் இது

கொழும்பு, மே 11

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை, சமாதான முயற்சியை, குழப்பும் வகையில் எதையும் செய்யவோ, பேசவோ வேண்டாம் என்று இலங்கை அரசு சகலருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வெளியுறவு அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த வேண்டுகோள் அடங்கி உள்ளது.

அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று பேச்சுக்கள் நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வந்துள்ளது தனக்கு மகிழ்ச்சி தருவதாகவும் அமைச்சர் விஜேரத்தின தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிருர்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கஷ்டங்களுக்கு மத்தியில் பேச்சுக்களுக்கு வந்துள்ளனர் என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

எமது அதிகாரிகள் விவகாரங்களை இனங்கண்டு பேச்சுக்களுக்கான வழிமுறைகளை வகுப்பதற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

### ஒத்துழைப்பு தேவை

நாட்டில் அமைதியை ஏற்படுத்த தீர்க்கமான பங்களிப்பைச் செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

11—05—1989
சித்திரை — 28
வியாழக்கிழமை

சுபநேரம்;
07.24 முதல் 08.54 வரை
ராகுகாலம்;
01.24 முதல் 02.54 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## மருத்துவக் கல்லூரி அரசிடம்!

வட கொழும்பு மருத்துவக் கல்லூரியை அரசாங்கம் நேற்றுச் சுவீகரித்தது.

இதற்கான உத்தரவை உயர் கல்வி அமைச்சர் ஜனப் ஏ. சி. எஸ். ஹமீத் நேற்றுப் பிறப்பித்தார்.

வட கொழும்பு மருத்துவக் கல்லூரி தனியார் ஸ்தாபனமாக இருந்தது. அங்கு பயிலும் மாணவர்களுக்கு எம்.பி. பி. எஸ். பட்டம் அளிப்பதில் ஏற்பட்ட பிரச்சினை பல்கலைக் கழக விவகாரத்தில் பெரும் பங்கு வகித்தது. (அ)

### பிரிட்டிஷ் தூதுக் குழுவினர்

## சாவகச்சேரி, பளை ஆஸ்பத்திரிகளுக்கும் விஜயம்

பச்சிலைப்பள்ளி, மே 11

யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள பிரிட்டிஷ் தூதுக்குழுவினர் சாவகச்சேரி, பளை அரசினர் வைத்தியசாலைகளுக்கும் சென்று பார்வையிட்டனர்.

வைத்தியசாலைகளுக்குஅத்தியாவசியமாகத் தேவைப்படும் உதவித் திட்டங்களை நேரில் பார்வையிட்டு தேவையானவற்றைத் தாம் செய்து தருவதாக அவர்கள் உறுதி கூறினர்.

இக்குழுவினருடன் யாழ். கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை, டாக்டர் வை. விஜயராஜா ஆகியோரும் வந்திருந்தனர். [ஒ-117]

## பௌத்த விகாரையில் இந்துக் கடவுள்கள்!

அட்டன் பௌத்த விகாரையில் புதிதாக விநாயகப் பெருமான்; முருகப் பெருமான்; மகாவிஷ்ணு பெருமாள் ஆகிய நான்கு தெய்வங்களின் விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன.

இன்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை விசேட பூஜைகள் நடைபெற்று உற்சவமூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளதாக அட்டன் பௌத்த விகாரை நிர்வாக அமைப்புக்குழு அறிவித்துள்ளது.

சுவாமிகளின் பிரதிஷ்டையைத் தொடர்ந்து 11 நாட்கள் பூஜைகள் நடைபெற்று 22 ஆம் திகதி தீமிதிப்பு நிகழ்ச்சி நடைபெறும்

பௌத்த விகாரைகளில் காவல் தெய்வங்கள் இந்து கடவுளர்களின் சிலைகள் வைக்கப்படுவது உண்டு. ஆனுல் உற்சவமூர்த்திகள் பிரதிஷ்டை செய்து வைக்கப்படுவது மிக அரிதாகும். [ஒ-க-58]

### திருமலை பிரட்ரிக் கோட்டையிலுள்ள

## சிங்கள அகதிகள் இடமாற்றம் ஜனாதிபதியால் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 11

திருகோணமலை பிரட்ரிக் கோட்டையில் தங்கி இருக்கும் சிங்கள அகதிகளின் இடமாற்றம் ஜனதிபதி பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

பிரட்ரிக் கோட்டையில் 1987 செப்டம்பர் 30 முதல் தங்கியுள்ள சிங்கள அகதிகளை திருமலை நகரில் இருந்து எட்டுமைல்தொலைவில் உள்ள சீனக்குடா கிளப்பின்பேர்க் முகாமுக்கு இடமாற்றம்செய்யும்படி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின கடந்த 30 ஆம் திகதி திருமலை சென்றிருந்தபோது உத்தரவிட்டிருந்தார்.

முதலமைச்சர் திரு. அ' வரதராஜப் பெருமாள் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் வைத்து திரு. ரஞ்சன் விஜேரத்ன இந்த உத்தரவைவிடுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)


கலர் படப் பிரதி ஒன்று
ரூபா 4-75
விநியோகம்:- 3 முதல் 5 நாட்கள்
நவீன கம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய நாடுங்கள்:
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

கயிற்றுச்சாக்கு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ் 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [10879]

National T. V. 20'', 14', Belling Oven National 2 in 1 5030, பாவித்த கட்டில், மேசை, சாப்பாட்டு மேசை, Cot, செற்றி செற், குசன் செற்றி இன்னும் பல உடன் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராம், 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (10871)

Second Hand Book House 16/3 Stanly Road (முரசொலி இலங்கை வங்கி முன் பட்டப் படிப்பு கல்லூரிலேன்) பழைய புத்தகங்கள் விலைக்கு வாங்கப்படும். சனி, ஞாயிறு முழு நாளும் கிழமை நாட்கள் காலை 10 மணி வரை திறந்திருக்கும். (388)

**FOR SALE**

Reasonable quantity of cement concrete blocks 4 inch thick now available. Regret inability to supply all callers last month. Needy May contact immediately: Ananth farm Kadduvan Road, Myliddy North. (390)

**தேவை**

கிளிநொச்சி ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்திற்கு உடன் அர்ச்சகர் ஒருவர் தேவை. பரிபாலன சபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்: செயலாளர் ஆலயபரிபாலன சபை. (387)

**சைவ உணவகத்தில் ஆட்கள் தேவை**

ரீ மேக்கர், சப்ளையர், சிப்பந்திகள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். விலாசம் திரு. L. பக்கீர்சாமி, 375, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [10856]

**சஞ்சிகை**

மல்லிகை, ஆய்வு, ஆலய மணி, நான், அர்ச்சனா, குமரன், ஞானக்கதிர், கொழுந்து, Lanka Guardian, திசை மற்றும் ஈழத்துச் சஞ்சிகைகள் அனைத்தும் விற்பனையாகின்றன. நீங்களும் உங்கள் சஞ்சிகைகளுக்கு சந்தாதாரராகிக் கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி/2509)

**தவறிய பணம்**

அதிசய வைரவர் கோயிலுக்கும் கறுப்பாச்சி அம்மன் கோயிலுக்கும் இடையில் 9, 500/- பணம் 8-5-89 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கா. இராஜரட்ணம், வேலணைத்துறையூர், இரட்ணம் ஸ்ரோர்ஸ் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [10877]

**குளிர்சாதனப் பெட்டிகள்**

ரூபா 750 மாத்திரம் செலுத்தி உங்கள் Fridgeக்கு Gas நிரப்பிக் கொள்ளுங்கள். Motor Compressor gas இரண்டிற்கும் ஒரு வருட உத்தரவாதம் கொடுக்கப்படும். Omega (ஈழநாட்டிற்கு எதிரில்) யாழ்ப்பாணம். (380)

**NEW CITY TRADERS**

Dayton T. V 12'' 14'' B & W 14'' 20'' கலர் Phillips 20'' Gas Cooker, Hotplate Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll கவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [2505]

**A/L 91 இரசாயனம்**

108. Brown Road ஆசிரியர் சத்தீஸ் பிரிவுII சனி, ஞாயிறு 11.00 a m. இரண்டாவது வகுப்பு சனி 11. 00 a m. பிரிவுI செவ்வாய், வியாழன் 6.30 a.m. (394)

**தவறிவிட்டது**

கனகையா செல்வராணி கொம்பனித்தெரு. கொழும்பு -2 என்ற முகவரியிடப்பட்ட அடையாள அட்டை யாழ்ப்பாணத்திற்கும் மூளாய்க்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் பொன்னாலை கிருஷ்ணன் கோயில் தேவஸ்தான காரியாலயத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (389)

**கோழிக்குஞ்சு விநியோகம்**
**UPLANDS FARM**

(Dekalb) பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (16-5-89) செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும். பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50 முன்கூட்டியே பதிவு செய்க. இல:9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (392)

**5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்**

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக புள்ளிகள் பெறவும் வசதியான பாடசாலையில் அனுமதி கோரவும் வழிசெய்யும் கட்டுரைத் தேன் துளி 60. ஆக்கம்: க. சொக்கலிங்கம் M A. உயர் கல்விப் பதிப்பக வெளியீடு. விலை ரூபா 17/50. புத்தகசாலைகளில் கிடைக்கும். (10883)

**GELT CENTRE**

Jaffna Hindu College- all students are requested to call at the college and collect their Bio- data forms on friday 12 05.89 at 3.30 p·m without fail. -Course Leader.- (10884)


## பண்டித பரீட்சை

கோப்பாய், மே 11

வட இலங்கை ஆரியபாஷாபிவிருத்திச் சங்கத்தின் பண்டித பரீட்சைகள் 27ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன இப்பரீட்சைகள் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடைபெறும் என அறிய வருகின்றது. [க-72]

# பிள்ளைகளுக்கு பிறந்தநாள் பரிசாக அறிவுரை நூல்களை வழங்குக!

## நூல் அறிமுக விழாவில் உரை

மானிப்பாய், மே 11

''உணவு வகைகள், உடைகள் ஆகியவற்றையே நாம் திரும்பத் திரும்ப பிறந்தநாள் பரிசாக பிள்ளைகளுக்கு வழங்கி வருகிறோம். பிள்ளைகளுக்கு பயன்படக்கூடிய அறிவுரைகளைக் கொண்ட நூல்களை பிறந்தநாள் பரிசாக வழங்க நாம் முன்வரவேண்டும்''

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ''காட்டில் ஒரு வாரம்'' நூலின் மூன்றாவது அறிமுக அரங்கில் நூல் பற்றிய திறனாய்வுரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி உயர்நிலை மாணவ மன்றம் ஒழுங்குசெய்த இந் நிகழ்ச்சிக்கு மகளிர்கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாண சுந்தரேசன் தலைமை வகித்தார்.

காட்டில் ஒரு வாரம்— மாணவர் பார்வையில் செல்விகள் எம். செந்தூர் செல்வி, எஸ். புஸ்பலதா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கலாநிதி நா. சுப்பிரமணியன் தமது திறனாய்வுரையில் கூறியதாவது:-

சிறுவர் இலக்கியம் படைப்பது நீண்டகால வரலாறு.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக சிறுவர் இலக்கியம் பல படிகளில் வளர்ச்சி கண்டுள்ளது.

அண்மையில்காலமான அழ. வள்ளியப்பா போன்றோர் கடந்த 40—50 ஆண்டுகளாகச் சிறுவர் இலக்கியம் படைத்துள்ளனர்.

ஓடிப்போனவன், வினோதனின் சாகசம், செத்துப்போன சின்னச்சாமி, யாதகக் கதைகள் (மொழிபெயர்ப்பு) போன்ற பல சிறுவர் இலக்கியங்கள் வெளிவந்துள்ள போதிலும் அநேகமானவை கவிதைகளாக அமைந்தனவே தவிர சிறுவருக்கான கதைகள் வடிவில் அமையவில்லை.

திட்டவட்டமாகச் சிறுவர்களின் கல்வி நோக்கோடு சமைக்கப்பட்ட படைப்புக்கள் அல்ல அவை.

காட்டில் ஒருவாரம் என்ற சிறுவர் நூல் திட்டமிட்டு சிறுவர்களின் உளவியலைக் கருத்தில் கொண்டு கல்வி நோக்கோடு அமைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் இலக்கியத்தில் ஒரு வரலாற்று மைல்கல்லாக இந் நூல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்படி அவர் கூறினார்.

கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் பேசுகையில், ''பிள்ளைகளின் சொல் உச்சரிப்பில் கவனம் செலுத்தி பாத்திரங்களின் மொழி அமைப்பு பிசகாமல் சொல்வதுடன் பிள்ளைகளுக்கு அதில் மொழிப் பயிற்சியையும் நூலாசிரியர் வழங்கி உள்ளார்'' எனக் கூறினார். (ச-90)

## பூரண கல்வியைப் பெற உளவளர்ச்சி விளையாட்டுக்களில் மாணவர்களை ஈடுபடுத்தவேண்டும்

### விளையாட்டுப் போட்டியில் உரை

யாழ்ப்பாணம், மே 11

விளையாட்டுக்கள் மூலம் நாம் உள வளர்ச்சியைப் பெறமுடிகிறது. உடல் வளர்ச்சிக்காக நிறை உணவு வழங்கப்பட இருக்கும் இக்காலத்தில் உள வளர்ச்சிக்கான விளையாட்டுக்களில் மாணவர்களை ஈடு படுத்துவதன் மூலம் பூரணமான கல்வியை மாணவர்கள் பெறமுடிகிறது.

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. ஆ. கமலநாதன் விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்தார்.

வித்தியாலய முன்னாள் அதிபர் திரு எஸ்.எம். மூர்த்தி இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலாளர் திரு. எஸ். வி. சிவபாலசிங்கம் ஆகியோர் விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பாரதி இல்லம் 326 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், கம்பன் இல்லம் 325 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் வள்ளுவர் இல்லம் 324 புள்ளிகளைப்பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. (ச - 90)

## பாடசாலை அபிவிருத்திக்கு பெற்றோர் தமது பங்களிப்பை நல்க வேண்டும்

### குழாய்க் கிணறு திறப்பு விழாவில் உரை

சாவகச்சேரி மே 11

பாடசாலைகளின் அபிவிருத்தியில் பெற்றோரும் நலன் விரும்பிகளும் ஆர்வத்துடன் தமது பங்களிப்பை நல்க வேண்டும். அனைத்துப் பாடசாலைகளும் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து செயல்பட முன்வரவேண்டும்.

இப்பாடசாலையின் பெருங் குறையாக இருந்த தண்ணீர் பிரச்சினைக்கு முடிவு காண உதவியவர்களை முன்மாதிரியாகக் கொள்வோம்.

சாவகச்சேரி நகர கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையில் திருமதி. ப. சோமசுந்தரமும் பிள்ளைகளும் அன்பளிப்புச்செய்த குழாய்க் கிணறு திறப்பு விழாவில் மங்கள விளக்கேற்றி அவர் உரையாற்றினார்.

பாடசாலை அதிபர் திரு. இ. மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் குழாய்கிணற்றைத் திறந்து வைத்தார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. பூ. வெற்றிவேலு உரையாற்றுகையில் குழாய்கிணற்றுக்கு உதவிய குடும்பத்தினரைப்பாராட்டியதுடன் அதிபர் திரு. மெய்யழகன் அபிவிருத்திச் சபையின் செயலாளர் திரு. நா. சிவசோதி ஆகியோரது முயற்சிகளுக்கும்பாராட்டுத் தெரிவித்தார்.

கிராம சேவை அலுவலர் திரு. வி. எஸ். துரைராசா டாக்டர் த. சிங்கராசா திருச்சபைக் குரவர் அருட்திரு. திருச்செல்வம் ஆகியோரது உரைகளை அடுத்துச் செயலாளர் திரு. நா சிவசோதி நன்றி உரை கூறினார். (ச-31)

## பல்கலைக் கழக பெண்கள் விடுதி

அரியாலை, மே 11

யாழ் பல்கலைக் கழக பெண்கள் விடுதி இம்மாதம் மீண்டும் திறக்கப்படும்.

1987 அக்டோபரில் சேதம் அடைந்த இவ்விடுதி தற்போது முற்றாகத் திருத்தப் பட்டுள்ளது. [க-13]

## அனலைதீவில் தடை ஊசி

அனலைதீவு, மே 11

அனலைதீவிலுள்ள மாடுகளுக்கு கோமாரி தடை ஊசி போடப்படுகிறது.

இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகளுக்கு கோமாரி தடை ஊசி போடப் பட்டுள்ளது. (க-18)

## நன்கொடை வழங்கப்படவில்லை

ஊர்காவற்றுறை, மே 11

ஊர்காவற்றுறை, நாரந்தனை, காரைநகர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் சன சமூக நிலையங்களுக்குரிய கடந்த ஆண்டு அரசநன்கொடை இன்னும் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது (க-16)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் உயர்திரு**
**குழந்தைவேல் - சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞர், P. W. D. நீர்ப்பாசனத் திணைக்களம்)

**தாயின் மடியில்:** 08 - 02 - 929
**காலன் கையில்:** 12 - 04 - 1989

''கடன் என்ப நல்லவை எல்லாம் கடன அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு''

என்ற வள்ளுவன் வாக்கை உணர்ந்துஅதற்கொப்ப வாழ்ந்த பெருந்தகையே! உம் பிரிவு எமக்கு அளப்பரிய பேரிழப்பே! ஐயா உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

★ 12 – 05 – 89 (வெள்ளிக்கிழமை) காலை 7.00மணிக்கு நெல்லண்டை, பருத்தித்துறையில் நடைபெற உள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'உடையார் வாசா'
ஐயனார் வீதி.
பருத்தித்துறை.

பனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(459)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்:** 10 - 02 - 1922
●●●
**மறைவு:** 11 - 04 - 1989

**சின்னத்துரை ஞானம்மா**

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரவணை கிழக்கு,
வேலணை.
(465)

பிரயாணம்... பிரயாணம்... பிரயாணம்...

## 'M' THREE TRAVEL

வழங்கும்

**சவூதிஅரேபியா, மாலைதீவு பிரயாணம்**

**I. Drivers** 45 வெற்றிடங்கள் 700 SR
[Semi Government இல் Bus Drivers]
- (i) 6 வருட அனுபவமுள்ள கனரக வாகன சாரதி பத்திரம்.
- (ii) ஓரளவு ஆங்கிலம் அல்லது அரபு தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

உடனடிப் பிரயாணத்திற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்

**II. I Man Co. Hospital** (வைத்தியசாலைக்கு) கீழ்க்காணும் வெற்றிடங்கள் எம்மிடமுண்டு.
- (i) Boiler Technician 5 வெற்றிடங்கள் 800 SR
- (ii) A. C, Technician 6 ,, 900 SR
- (iii) Water Treatment Technician 5 ,, 900 SR
- (iv) Generator Technician 6 ,, 800 SR
- (v) Building Equipment Operators 6 ,, 600 SR

[Elevator, Pump, Fire Equipment அனுபவமுள்ளவர்கள்]
- (vi) Light Vehicle Drivers 2 வெற்றிடங்கள் 700 SR

[6 வருட அனுபவமுள்ள வாகன சாரதி பத்திரம்]
- (vii) Cleaners: Hospital 13 வெற்றிடங்கள் [வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்கள்]

**III Hospital Cleaners** 400 SR
[பெண்களுக்கு மட்டும், 30—38 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்]

**IV Garden Maintenance** 50 வெற்றிடங்கள் [தோட்ட பராமரிப்பாளர்கள்]

**V Maldive** மாலைதீவுக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் பெண்களுக்கு மட்டும் உண்டு.
- (i) Supervisor மேற்பார்வையாளர் 1 வெற்றிடம்
- (ii) Nurse (தாதி) 1 வெற்றிடம்
- (iii) Lady Doctor [பெண் வைத்தியர்] 1 வெற்றிடம்
- (iv) Cutters 15 வெற்றிடங்கள் 85 U.S.D.
- (v) Helpers 35 ,, 70 ,,
- (vi) Ironers 15 ,, 70 ,,
- (vii) Tailors 25 ,, 85 ,, [தையல்காரர்கள்]

குறிப்பு:
- ● PASS PORT [கடவுச்சீட்டு], BOND [பொண்ட்] என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
- ● எமது முகவர் தற்சமயம் இவ்விடமுள்ளார் என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றோம்.
- ● எமது காரியாலயத்தில் காலை 9 00மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

✶ நம்பிக்கை ✶ நாணயம்
என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
'இந்திரபவனம்'
சோதிவீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1, 1வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2541)

## எமது புதிய வெளியீடுகள்

1. பாண்டியராஜன் ✶ அமலா 'நெத்தி அடி'
2. ராஜேஸ் ✶ வடிவுக்கரசி 'தாயே வருக' (ஒறிஜினல்)
3. சிரஞ்சீவி ✶ பானுப்பிரியா 'சத்தியத்தின் சவால்' (ஒறிஜினல்)
4. காதல் இளவரசன் கமலஹாசன் 'சோகப்பாடல்கள் பாகம் - 1' (ஒறிஜினல்)

✶ அடுத்த வெளியீடுகள்!

ரஜனி காந்தின் - 'சிவா',
பிரபுவின் - 'பிள்ளைக்காக'
பிரபுவின் - 'நினைவுச் சின்னம்'.

**குணம் வீடியோ சென்ரர்,**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (சி/2549)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● இவர்களும் இனிமேல் சமாதான நீதிவான்கள்!

கொழும்பு, மே 11

பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் (இன்ஸ்பெக்டர்), மாகாண சபை உறுப்பினர்களும் பதவி வழி சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் பேரில் நீதி அமைச்சர் வின்சென்ட் பெரேரா இந்த நியமனங்களைச் செய்திருக்கிறார்.

இதன் மூலம் நாடு முழுவதிலும் உள்ள 332 பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் 437 மாகாணசபை உறுப்பினர்களும் சமாதான நீதிவான்களாகின்றனர்.

ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து இந்த நியமனங்கள் அமுலுக்கு வந்துள்ளன.

பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். (ஒ-எ)


பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
பருத்தித்துறை

### 24/8431 இலக்க மொறிஸ் லொறி விற்பனை

எமது சங்கத்தின் பாவனையிலுள்ள 24/8431 இலக்க லொறியொன்று கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு.

இதற்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 100/- ஐயும், கேள்விட் பத்திரத்திற்கு ரூபா 250/- ஐயும் சங்கத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தை தலைமை அலுவலகத்தில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். வாகனத்தை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் எமது பிரதான களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

1989-05-31 புதன்கிழமை பகல் 12-00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்

1989-05-09. [C/2546]


# மந்திகை ஆஸ்பத்திரிக்கும் பிரிட்டிஷ் அரசு உதவும்

## ரூ. 40 லட்சத்துக்கு உபகரணங்கள் கிடைக்கும்

வல்வெட்டித்துறை, மே 11

மந்திகை ஆஸ்பத்திரிக்கும் 40 லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் கிடைக்கவுள்ளன.

யாழ்ப்பாணம் வந்திருந்த பிரிட்டிஷ் தூதுக் குழுவினர் செவ்வாயன்று மந்திகைஆஸ்பத்திரிக்கும் விஜயம் செய்தனர்.

அங்கு வைத்தியசாலை அதிகாரியான திரு. எஸ். கதிரவேற்பிள்ளையிடம் மேற்படி உபகரணங்களை இம்மாத இறுதிக்குள் வழங்குவதாக அவர்கள் உறுதி கூறினர்.

தூதுக் குழுவினர் ஆஸ்பத்திரியின் பல பிரிவுகளுக்கும் நேரில் விஜயம் செய்து, அங்குள்ள குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

நோயாளிகளின் கஷ்ட நிலைமைகளைப் போக்குவதே மது விஜயத்தின் நோக்கம் என தூதுக்குழுவினர் தெரிவித்தனர். [ஒ-160]

## சமாசக் கூட்டம்

அரியாலை, மே 11

யாழ். மாநகர சபையின் சனசமூக நிலையங்களின் சமாசத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் அரியாலை ச. ச. நிலையத்தில் சமாசத் தலைவர் திரு. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபையின் கீழ் இயங்கி வரும் அனைத்து ச. ச. நிலையங்களும் நடப்பு வருட ஆண்டுப் பொதுக்கூட்டத்தை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி புதிய அங்கத்தவர் பட்டியலை உடனடியாக யாழ் மாநகர சபை ஆணையாளருக்கும் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கும் யாழ் மாநகர சபை ச. ச. நி. சமாசத்திற்கும் அனுப்பி வைக்கவேண்டும் என இக்கூட்டம் தீர்மானித்தது.

அத்துடன் மேற்படி சமாசத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஜூன் மாதம் 6 ஆம் திகதி நடத்தப்பட்டு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் கூட்டம் முடிவு எடுத்தது. [க-13]

### தனியார் கல்வி நிலையங்கள் குறித்து உரை

## கல்வித்தரத்தைஉயர்த்துகின்றன சமுதாயப் பணியிலும் ஈடுபாடு

யாழ்ப்பாணம், மே 11

'தனியார் கல்வி நிலையங்கள் கல்வித் தரத்தை உயர்த்துவதற்குச் சிறந்த சேவையாற்றுகின்றன. அத்துடன் அவை சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் ஈடுபடுகின்றன'

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி கலைவாணி கல்வி நிலையத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

அதற்குத் தலைமை வகித்து உரையாற்றிய வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட போறூட் நிறுவனத்தின் திட்ட இணைப்பதிகாரி திரு. க. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட றெமிங்ரன் கல்வி நிலைய அதிபர் திரு. மனோகரன், வட்டு. விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. இ. ஜெயமோகன், நாட்டுக்கூத்து அபி. சபைத் தலைவர் திரு. அ. முருகவேள், முன்னாள் ஆசிரியர் திரு, வ. மங்களேஸ்வரன் ஆகியோரும் நிலைய மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வன் யோகா. சேந்தனும் உரையாற்றினார்கள்.

நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் திரு ச. வரதராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்;

நிதித்திட்டமிடல் பொறுப்பாளர் ஆசிரியர் திரு. பொ ரவிச்சந்திரன் நிலையச் சிறப்புரை நிகழ்த்த நிலையப் பொறுப்பாளர் திரு. ஜ. தேவானந்தன் நன்றியுரை கூறினார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

உழவர் நடனம், குறத்தி நடனம், கிராமிய நடனம், கவியரங்கம், ஆங்கிலப்பாட்டு, வில்லிசை, மேலைத் தேசத்தவர் நாடகங்கள், தமிழ் நாடகங்கள் ஆகியவை இவற்றுள் அடங்கும். (க)

## மாணவருக்கு விளையாட்டுக்கான வசதிகள் செய்யப்பட வேண்டும்

### கொத்தணி அதிபர் உரை

''பிள்ளைகள் தாமாகவே விளையாட வேண்டும் என்ற உள்ளார்ந்த உணர்வு உடையவர்கள். எனவே பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி விளையாட்டில் பங்குபற்றச் செய்ய வேண்டுமென்றில்லை. வசதிகளைச் செய்து கொடுப்பதே எமது கடமை ஆகும்''

கோப்பாய் நாவலர் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய்க் கொத்தணி அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் ''விளையாட்டு ஆக்கபூர்வமான சிந்தனை வளர்ச்சியையும் படைப்பாற்றலையும் ஆராயும் தன்மையையும் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும்'' என்று கூறினார்.

பாடசாலை அதிபர் திருமதி எம். பொன்னையா தமது உரையில் இக்கட்டான சூழலில் வருங்காலச் செல்வங்களான மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவிவரும் சகலரையும் தாம் பாராட்டுவதாகக் கூறினார்.

நீல இல்லம் முதலாம் இடத்தையும் பச்சை இல்லம் இரண்டாம் இடத்தையும் சிவப்பு இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (க - 27)

## வருடம் நானூறு பேர் பாம்புக்கடிக்குப் பலி!

கொழும்பு, மே 11

இலங்கையில் பாம்புக்கடியினால் மரணமாவோரின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 400 பேர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளும் தொழிலாளிகளும் ஆவர்.

வருடாந்தம் உலகில் பாம்புக்கடியினால் இறப்போரின் எண்ணிக்கை சராசரி 41 ஆயிரம் என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர்வரை பாம்புக்கடியினால் உயிரிழக்கின்றனர்க (ஒ-எ)

## ரூ.2000 இன்னும் வழங்கப்படவில்லை

முல்லைத்தீவில் 86ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கை இராணுவம் நடத்திய ஆகாயத் தாக்குதலின் போது இடம் பெயர்ந்த அகதிகளுக்கு மீளக் குடியமர்தல் பணமான ரூபா 2,000 இன்னும் வழங்கப்படவில்லை என அறிய வருகின்றது.

முல்லைத்தீவு பட்டின எல்லையைச் சேர்ந்த செல்வபுரம், கள்ளப்பாடு, வண்ணான்குளம், மணற்குடியிருப்பு, கோயிற் குடியிருப்பு, ... ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு ... அகதிகள் ஆவர். [க-92]


## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### ★ சவூதி அரேபியா

| | வேலைகள் | பேர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | கெவிவெய்கிள் றைவேர்ஸ் | — 05 | 700 SR |
| 02. | ஸ்ரோர் கான்ட்லர் | — 03 | 300 SR |
| 03. | றோட் மெயின்ரினன்ஸ் ரெக்னிசிசன்ஸ் | — 08 | 600 SR |
| 04. | ஜெனரல் வேக் றைவர் | — 08 | 650 SR |
| 05. | றோட் மெயின்ரினன்ஸ் லேபறர் | — 100 | 300 SR |
| 06. | கிளீனிங் லேபறர் | — 100 | 300 SR |
| 07. | டிக்கிங் அன் கிறவுண்ட்ஸ் பெசலிஸ்ட் | — 10 | 650 SR |
| 08. | டிக்கிங் லேபறர் | — 100 | 375 SR |
| 09. | பில்டிங் கொன்ஸ்றக்சன் போமன் | — 03 | 850 SR |
| 10. | காப்பென்ரர் | — 15 | 650 SR |
| 11. | காப்பென்ரர் கெல்ப்பர் | — 10 | 350 SR |
| 12. | பேணிச்சர் பெயின்ரர் | — 05 | 600 SR |
| 13. | பேணிச்சர் பெயின்ரர் கெல்ப்பர் | — 10 | 300 SR |
| 14. | எலக்ரிசிசன் [லோவோல்ரேச்] | — 03 | 750 SR |
| 15. | எலக்ரிசிசன் | — 05 | 650 SR |
| 16. | பவர் பிளான்ட் ஒப்பறேற்றர் | — 05 | 700 SR |
| 17. | சிவேச் றீற்மன்ட் பிளான்ட் ஒபரேட்டர் | — 05 | 700 SR |
| 18. | பெஸ்ட் கொன்றோல்ட் போமன் | — 03 | 800 SR |
| 19. | ,, ,, ரெக்னிசிசன் | — 10 | 600 SR |
| 20. | ,, ,, கெல்ப்பர் | — 10 | 400 SR |
| 21. | போமன் (சிவில் என்ஜினியர்) | — 04 | 1500 SR |
| 22. | ,, (எலக்றிக்கல் என்ஜினியர்) | — 04 | 1500 SR |
| 23. | போமன் (மெக்கானிக்கல் என்ஜினியர்) | — 04 | 2000 SR |
| 24. | போமன் (கொம்மியுனிகேசன் ,, ) | — 04 | 2000 SR |
| 25. | ரைப்பிஸ்ட் | — 05 | 700 SR |
| 26. | ரெலிபோன் ரெக்னீசியன் | — 05 | 850 SR |
| 27. | ரெலிபோன் அன் லைன் இன்ரலேசன் ரெக்னிசியன் | — 03 | 750 SR |
| 28. | ரெலிபோன் ஒப்பறேற்றர் | — 05 | 700 SR |
| 29. | கொம்பியூற்றர் ஒப்பறேற்றர் | — 05 | 800 SR |
| 30. | கிளீனிங் சுப்பவைசர் | — 10 | 700 SR |
| 31. | கிளாஸ் பிற்றர் | — 05 | 750 SR |
| 32. | ஓட்டோ பெயின்ரர் | — 05 | 750 SR |
| 33. | ஓட்டோ எலக்ரிக்கல் ரெக்னீசியன் | — 03 | 700 SR |
| 34. | றேடியேற்றர் ரெக்னீசியன் | — 05 | 700 SR |
| 35. | வீல் பலன்ஸ் ,, ,, | — 05 | 650 SR |
| 36. | ரயர் றிப்பயர் ,, ,, | — 05 | 650 SR |
| 37. | வாணிங் சிஸ்ரம் ஒப்பறேற்றா | — 05 | 700 SR |
| 38. | றைவர் [Fire Truck] | — 08 | 800 SR |
| 39. | பயர் டிப்பாட்மென்ட் றெக்கோட் கீப்பர் | — 03 | 700 SR |
| 40. | அசிஸ்ரன் ரெக்னீசியன் பயர் புரொட்டெக்சன் Asst. Tech சிஸ்ரம் | — 03 | 600 SR |
| 41. | கிளீனர் [ஏயர் கிருப்ட்] | — 100 | 300 SR |
| 42. | லேபறேஸ் | — 25 | 350 SR |
| 43. | ஒப்பீஸ் போய் [Office boy] | — 10 | 300 SR |
| 44. | கெவி டியூட்டி றைவர் | — 05 | 750 SR |
| 45. | குக் [Cook] | — 05 | 750 SR |
| 46. | குக் கெல்ப்பர் | — 10 | 400 SR |
| 47. | ரொக்ரர் [Doctor] | — 02 | 2500 SR |
| 48. | மேல் நேஸ் [Male Nurse] | — 04 | 1200 SR |
| 49. | பிளம்பர் | — 05 | 650 SR |
| 50. | பெயின்ரிங் லேபறர் | — 04 | 350 SR |

● நேர்முகப்பரீட்சை 8-5-89 தொடக்கம் 14-5-89 வரை.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**அ. தவச்செல்வம்** (B. Sc Hons)
ஆசிரியர்
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.



இரண்டாவது
### ★ பிறந்த நாள் வாழ்த்து ★

செல்வி
பத்மநாதன் - சுரேக்கா
11 - 05 - 1989

மேற்கு ஜேர்மனியில் வசிக்கும் பத்மநாதன் -சுசீலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுரேக்கா தனது இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார்.

இவரை உரும்பராயில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், மாமாமார் மச்சான்மார், மச்சாள்மார்களும்; சாவகச்சேரியில் வசிக்கும் அம்மப்பா அம்மம்மா, மாமாமார் சித்திமார்களும், புளியங்குளத்தில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார் அக்காமார்களும், மேற்கு ஜேர்மனியில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, அக்கா, அண்ணா, ரவி அத்தான் ஆகியோரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (10847)



முதலாவது
### பிறந்த நாள் வாழ்த்து



✶✶ செல்வன் சா. சாரங்கன் ✶✶

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த சாந்தலிங்கம் தங்கநாயகி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் சாரங்கன் தனது முதலாவது பிறந்த நாளை 11- 5- 89 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, பிரான்ஸ் பெரியப்பா, பெரியம்மா, ஹனி அக்கா, மாமாமார் அத்தைமார், மச்சான்மார். செல்வி மச்சாள், பிரசாத் மச்சான், பிரான்ஸ் மாமா, அத்தை, கோகி மச்சான், அண்ணன்மார், அக்காமார், கிருஷ்ன் அண்ணா அனைவரும் மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகரை வணங்கி பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (446)



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான
### கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in Basic Language**

ஆரம்பம்: 15 - 05 - 1989 (திங்கள், புதன், வெள்ளி)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 14 - 05 - 1989




UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)

(சி/2437)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஒளி" வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

குருநகர், மே 11

மண்டைதீவில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் 1986 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களது ஞாபகார்த்தமாக தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்காக 11 பேர் கொண்ட நொக்கவுட் முறையிலான உதை பந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் ஏற்பாடுகளை செய்து வருகிறது.

யாழ் - உதைபந்தாட்ட லீக்கின் அநுசரணையுடன் லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் "ஏ.பி" என இரு பிரிவுகளாகப் போட்டி நடத்தப்படும்.

பங்குகொள்ளும் கழகங்கள் இம்மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளன.

போட்டிகள் குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இறுதிப் போட்டி 10-6-89 ல் இடம்பெறும்.

(இ-51)

மட்டக்களப்பு மாவட்ட நிவாரண மோசடி

# கிராம சேவையாளர்கள் மீது குற்றச்சாட்டும் - மறுப்பும்

மட்டக்களப்பு, மே 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு அமைச்சின் நிவாரண கொடுப்பனவான ரூபா 4,000 வழங்குவதில் கிராம சேவை அலுவலர்கள் ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று மாகாணசபை உறுப்பினர்கள் நேரடியாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேற்படி குற்றச்சாட்டுகளை ஏற்க மறுத்துள்ள கிராம சேவை அலுவலர்கள் செயலக உயரதிகாரிகள் தான் இதற்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளனர்

இது சம்பந்தமாகக் கூறப்படுவதாவது;

மட்டக்களப்பு நகர மண்டபத்தில் அண்மையில் புனர்வாழ்வு குறித்து ஆராயும் மாநாடு ஒன்று நடைபெற்றது. இதற்கு மாகாணசபை உறுப்பினர்கள் கிராம சேவை அலுவலர்கள் உட்படப் பலர் அழைக்கப்பட்டனர்.

அரச அதிபர் திரு. கே. செல்வரெத்தினம் மாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

மாகாணசபை உறுப்பினர்கள் தரப்பில் கிராம சேவை அலுவலகர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சில வருமாறு:

★ நிவாரணப்படிவம் விநியோகித்து நிவாரணம் பெற்றுக் கொடுக்க ரூபா 500 முதல் 2000 வரை ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு படிவம் விநியோகிக்கப்படவில்லை. பாதிக்கப்படாதவர்களுக்கும் உறவினர், நண்பர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

★ இறந்தவர்கள், வெளியூர்களில், வெளிநாடுகளில் வசிப்பவர்களின் பெயர்களில் நிவாரணப்பணம் பெறப்பட்டுள்ளது.

★ பொதுமக்கள் பணத்தை சுரண்டி மோட்டார் சைக்கிள் வாங்குகிறார்கள். வீடு வளவு வாங்கியுள்ளனர். இவ் விடயத்தையிட்டு பல தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. சிலரை கையும் மெய்யுமாக பிடித்துள்ளோம்.

இப்படிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

கிராமசேவை அலுவலர் தரப்பிலான மறுப்புகள் வருமாறு

★ ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் ஒரு சில கிராம சேவை அலுவலர்கள் செய்திருக்கலாம். அதற்கான பழியை சகலர்மீதும் போடுவது நல்லதல்ல.

அரச அதிபர் தொடக்கம் செயலக அதிகாரிகள் திட்டமிட்டு நிவாரணம் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருத்தல் வேண்டும். படிவங்களை வழங்கினால் மட்டும்போதாது-போதிய அறிவுறுத்தல்களையும் வழங்கி இருக்கவேண்டும்.

★ கிராம சேவை அலுவலர்கள் இன்று இருபக்கம் அடிவாங்கும் மத்தளம் ஆக உள்ளனர். ஒரு பக்கம் உயரதிகாரிகள், மறுபக்கம் ஒரு தீவிரவாதகுழுக்கள்.

★ அரச உயரதிகாரிகள் தந்திரமாக தப்பிக்கொள்கிறார்கள். இதனால் தான் எம்மீது பழியை கொட்டுகிறார்கள்.

★ இவ் விடயத்தில் எந்தவொரு விசாரணை நடைபெற்றாலும் முகம்கொடுக்க நாம் தயார். சில அதிகாரிகள் தொடர்பான தகவல்களையும் அம்பலப்படுத்துவோம்.

★ உயிருக்கு பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்குமானால் மேலும் பல விடயங்களை அம்பலப்படுத்துவோம்.

இப்படி கிராமசேவையாளர் தரப்பில் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(இ- 21)

## ஐயப்ப சுவாமிக்கு ஈழத்தில் முதல் ஆலயம்

ஐயப்ப சுவாமியின் ஆலயம் ஒன்று ஒருலட்சம் ரூபா செலவில் சுட்டுவனில் அமைக்கப்பட்டு வருகிறது.

சுட்டுவன் கரண்டக்குளம் என்னும் தலத்தில் இவ்ஆலயம் 18 படிகளுடன் கூடியதாக மிகவும் தத்ரூபமான முறையில் அமைக்கப்பட்டு வருகிறது.

வடக்கில் முதன் முதலாக ஐயப்ப சுவாமிக்கு ஆலயம் அமைக்கும் இம்முயற்சியை ஐயப்பரின் பக்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இத்திருப்பணியை கூடிய விரைவில் நிறைவேற்றி கும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடத்த ஐயப்பதாஸன் சி. அருணாசலக் குருக்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

(ச- 68)


## ★ சவூதி ★

## உடனடியான வேலைவாய்ப்பு

| | Salary |
|---|---|
| Heavy Duty Driver | 700 |
| Store Handler | 300 |
| Road Maintenance Technician | 600 |
| General Work Driver | 650 |
| Road Maintenance Labourer | 300 |
| Cleaning Labourer | 300 |
| Digging and Ground Specialist | 650 |
| Digging Labourer | 375 |
| Building Construction Foreman | 850 |
| Carpenter | 600 |
| Carpenter Helper | 350 |
| Furniture Painter | 600 |
| Furniture Painter Helper | 300 |
| Electrical Appliance Electrician (Low voltage) | 750 |
| Electrician | 850 |
| Power Plant Operator | 700 |
| **Support Section:** | |
| Heavy Duty Driver | 750 |
| Cook | 750 |
| Cook Helper | 400 |
| G. P. Doctor | 2500 |
| Male Nurse | 1200 |
| **Sports Hall:** | |
| Cleaning Labourer (Sports equipment) | 300 |
| Cleaning Supervisor | 700 |
| Cleaner | 300 |
| Swimming Pool Cleaner | 300 |
| Swimming Pool Operator | 400 |
| Electrician Sport Arena | 700 |
| Plumber Sport Arena | 650 |
| Painting Labourer | 250 |
| Carpenter | 650 |
| Cleaner (General) | 300 |
| Sewage Treatment Plant Operator | 700 |
| Pest Control Foreman | 800 |
| Pest Control Technician | 600 |
| Pest Control Helper | 400 |
| Facilities Foreman (Civil Engineer) | 1500 |
| Facilities Foreman (Electrical Engineer) | 1500 |
| Facilities Foreman (Machanical Engineer) | 2000 |
| Facilities Foreman (Communication Engr.) | 2000 |
| Typist | 700 |
| Telephone Technician | 850 |
| Telephone and Line Installatiou Technician | 750 |
| Telephone Operator | 700 |
| Computer Operator | 800 |
| Cleaning Supervisor | 700 |
| **Special Requirement:** | |
| Panei Beater / Glass Fitter | 750 |
| Auto Painter | 750 |
| Auto Battery and Electrical System Tech. | 700 |
| Radiator Technician | 700 |
| Wheel Balance Technician | 650 |
| Tyre Repair Technician | 650 |
| **Fire Department:** | |
| Warning System Operator | 700 |
| Driver Fire Trucks etc. | 800 |
| Fire Dept. Reports and Record Keeper | 700 |
| Assistant Technician Fire Protection System | 900 |
| **General Services:** | |
| Cleaner (Aircraft) | 300 |
| Loading, Unloading Labourer | 350 |
| Office Boy | 300 |

S. O. M. C

● Age: 21 தொடக்கம் 49 வரை

# T. V. TRAVELS

Brown Road,
KOKUVIL.


## அப்போதிக்கரீஸ் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 11

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அப்போதிக்கரீஸ் சுற்றுக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்ற போட்டிகளில் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் 0-7 என்ற கோல் வித்தியாசத்திலும் கிரீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் போட்டிக்குச் சமுகமளிக்காததால் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின.

நடைபெற்ற ஆட்டங்களில் யுத் கார்மல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய பாடும் மீன் விளையாட்டுக் கழகம் 0-2 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

அரியாலை விளையாட்டுக் கழகத்திற்கும் பொற்பதி விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

(க-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி றஞ்சிதமலர் - இராசதுரை**

| உதயம்: | அஸ்தமனம்: |
|---|---|
| 16. 10. 1965 | 11. 04. 1989 |

திதி: 11. 05. 1989
(வியாழக்கிழமை)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்ட அணையாச் சுடரே!
எந் நாளும் இந் நாளென்றே உங்களை மறவாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக் கணவர் — பிள்ளை,
பெற்றோர் — சகோதரர்கள்,
உற்றார் — உறவினர்.

நல்லூர்,
பூநகரி.

(1688)


## ★ வேலை வாய்ப்பு ★

நல்ல சந்தர்ப்பம்

**லிபியா**

இங்லிஸ் கொம்பனியில் பின்வரும் வெற்றிடங்கள் சகல வசதிகளுடனும் 10,000 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளத்துடன் உண்டு.

1. மேசன்மார்
2. தச்சுத் தொழிலாளர்
3. வெல்டர்
4. கம்பி வளைத்துக் கட்டுபவர்கள்
5. எயர் கொண்டிசன் மெக்கானிக்
6. மோட்டார் வையிண்டர்
7. ஓவர்கெட் லையின்ஸ்மன்
8. தொழிற்சாலை எலெக்றிசன்
9. Electrical Engineers Salary 20,000/-)

**GERMANY - ஜேர்மனி**

எல்லா வயதினரும் விரைவில் நேரடியாக அனுப்பிவைக்கப்படுவர்.

**சவூதி**

1. **Govt. Bus Drivers**
அரசாங்க பஸ் சாரதிகள்
6 நாள் - 8 மணி நேர வேலை
சாப்பாடு சகல வசதிகளுடனும்
6300 ரூபா சம்பளமும் தாராளமாக
ஓவர் ரைமும் வழங்கப்படும்.

**ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்**
**Hospital Cleaners**

ஒப்பின் விஸா - 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
6 நாள் - 12 மணிநேர வேலை
ஒரு நேரச்சாப்பாடும் இருப்பிட வசதிகளுடன்
7200/- சம்பளம்

**Car Washers**
**கார் கழுவுபவர்கள்**

21 வயதுக்கு மேற்பட்டவர்கள்
6 நாள்- 8 மணி நேர வேலை
சாப்பாடு இருப்பிட வசதிகளுடன்
4500/- சம்பளமும்
தாராளமாக ஓவர் ரைமும்

**சவூதி-கொறியன் கொம்பனியில்**

1. தெரு விளக்கு எலெக்றிசன்ஸ் ரூபா 7200 + சாப்பாடு
2. வாகன விளக்கு ரெக்னிசன் ரூபா 9000 + சாப்பாடு
3. சென்றல் AC ரெக்னிசன் ரூபா 8100 + சாப்பாடு
4. டீசல் எஞ்சின் மெக்கானிக் ரூபா 7200 + சாப்பாடு
5. வொயிலர் [Boiler] ரெக்னிசன் ரூபா 7200 + சாப்பாடு
6. கட்டிடப் பகுதி இயந்திர ஒப்பறேற்றர் ரூபா 5400 + சாப்பாடு
7. பிளம்பரும் பெயின்ரரும் ரூபா 8100 + சாப்பாடு
8. நீர் சுத்திகரிக்கும் ரெக்னிசன் ரூபா 7200 + சாப்பாடு

மேற் கூறப்பட்ட வேலையாட்களுக்கு சாப்பாடு சம்பளத்துடன் 100 மணித்தியாலம் ஓவர்ரைம் கொடுக்கப்படும்.

**சாவகச்சேரியில்**

## திரு. V. யோகலிங்கத்தை

கச்சாய் வீதியில் சந்தித்து
விபரங்களைப் பெறவும்.

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
● காலை 10. 00 மணிக்கு முன் நேரில் வரவும்.

## சிவா மாஸ்ரர்

தொழில் ஆலோசகர்
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

[சி-2540]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல்.

**பொருள்:**
ஒருவனுக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி அவனுடைய புகழைக் கெடுக்கின்ற சூதைப்போல் வறுமை தருவது வேறொன்று இல்லை.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
11 - 05 - 1989 த. பெ. இல: 23

## அடையாள அட்டைகள்

தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் வேலைகள் மாகாண அடிப்படையில் பரவலாக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு முடிவதற்குள் மாகாண மட்டத்தில், அடையாள அட்டைகள் வழங்கும் வேலைகள் தொடங்கி விடும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் திரு. பந்துலகுலதுங்கா தெரிவித்திருக்கிறார்.

இது வெறும் வாய்ப் பேச்சாகவோ, அல்லது காகிதத்தின் மேல் எழுத்தாகவோ இருந்து விடாமல், செயல்வடிவம் பெற்றால் அதனால் மக்களே பெரும் நன்மை அடைவார்கள். குறிப்பாகத் தமிழ்ப் பேசும் மக்களுக்குப் பல கஷ்டங்களும், அசௌகரியங்களும் நீங்கும்

தேசிய அடையாள அட்டை இப்போது மக்களின் ஓர் அத்தியாவசிய பொருளாகி விட்டது. இல்லை இல்லை; அதி அதி அத்தியாவசிய பொருளாகி விட்டது! உணவு இல்லாமற் கூட இரண்டு மூன்று தினங்களுக்கு இருந்து விடலாம். ஆனால் தேசிய அடையாள அட்டை இல்லாமல் ஒரு நிமிடம் தானும் இருக்க முடியாது.

விசேடமாகத் தமிழர்கள், வீட்டில் இருக்கும் போதும், வீதியால் செல்லும் போதும், ஆலயம்சென்றால் என்ன, ஆபத்துக்கு உதவச் சென்றால் என்ன அடையாள அட்டை வைத்திருக்காவிட்டால் சந்தேகத்துக்கு உரியவராக மட்டும் அன்றி, சொல்லொணாத இன்னல்கள், துன்பங்களுக்கும் ஆளாக நேரிடும். பகிடிக்கும் பொய் சொல்லாதே என்பார்கள். அதே போல மறந்தும் அடையாள அட்டை இல்லாமல் இருக்கக் கூடாது என்ற வாசகம் இப்போது மிகப் பொருத்தம்.

அம்மட்டல்ல. வெளிமாவட்டம் அல்லது வெளிமாகாணம் செல்லும் போதும் தப்பித் தவறியும் அடையாள அட்டை இல்லாமல் பயணம் செய்ய முடியாது. அதே போல வெளிநாடு செல்வதற்குக் கடவுச் சீட்டுப் பெறுவதற்கும் அடையாள அட்டையே முதன்மைத் தேவை. உத்தியோக அலுவல்கள் எதனைச் செய்வதற்கும் அடையாள அட்டையும் கையுமாக இல்லாவிடில் எந்தக் காரியமும் நடக்காது.

மொத்தத்தில் இலங்கையர் ஒருவரின், குறிப்பாகத் தமிழர் ஒருவரின், வாழ்க்கையில் அடையாள அட்டை மிக மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அது இல்லையேல் நாளாந்த வாழ்க்கை நகர்வது கஷ்டம் அல்லது நரகம் என்ற நிலை!

இத்துணை பிரதானமான ஒரு பொருளைப் பெறுவது என்பது மிகச்சிரமமான காரியமாக உள்ளது. மாவட்டச் செயலகங்களில், உதவி அரச அதிபர் அலுவலகங்களில், கிராமசேவை அலுவலர்களிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடிந்தாலும், கொழும்பிலேயே அடையாள அட்டை வழங்கும் அதிகாரம் முடக்கப்பட்டிருக்கிறது.

அதனால் மிகப் பிரதான தேவையான அடையாள அட்டையைப் பெறுவதற்கு மக்கள் பல நாட்கள் காத்திருக்க வேண்டி உள்ளது. இந்தக் கருமம் மாகாண ரீதியாகப் பரவலாக்கப்பட்டால், மக்கள் அடையாள அட்டைகளை இலகுவில் பெற்றுக் கொள்ள வழி பிறக்கும்.

ஆகவே இதனை வருட இறுதிவரை என்று காலம் தாழ்த்தாது உடனடியாகவே செயற்படுத்தி மக்களுக்கு உதவுவது நல்லது.

# நேபாளத்திற்கு 'டிமார்ச்' அறிவித்தல் இந்திய அரசு அனுப்பியுள்ளது!

### எங்கு, எப்போது, என்ன பேசுவது என்பதைத் தெரிவிக்கும்படி

புதுடில்லி, மே 10

இந்தியா, நேபாள அரசுக்கு உத்தியோகபூர்வமாக 'டிமார்ச்' (demarche) அறிவித்தல் அனுப்பியிருக்கிறது.

அந்த அறிவித்தலில் 'இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்த திகதி, இடம், பேசப் படவேண்டிய விஷயங்கள் ஆகியன பற்றி உடனடியாக அறிவிக்க வேண்டும்'— என்று நேபாள அரசை இந்திய அரசு வற்புறுத்தியுள்ளது,

இந்த அறிவித்தலுக்கு இன்னமும் நேபாளத்திடம் இருந்து பூரணமான, திருப்திகரமான பதில் வரவில்லை என்று புதுடில்லியில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேபாள - இந்திய ராஜதந்திர உறவுகள் இப்போது மோசமான நெருக்கடிக் கட்டத்தை அடைந்துள்ளது.

சீனாவிடமிருந்து நேபாளம் ஆயுதங்கள் வாங்கத் தொடங்கியதில் இருந்து காத்மண்டு அரசுடன் இந்தியா கருத்து வேறுபாடு கொள்ளத்தொடங்கியது.

இரண்டு மாதங்களுக்கு முன் இந்திய - நேபாள வர்த்தக உடன்படிக்கை ரத்தாகியது. இதனால் நேபாளம் பொருளாதார முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

புதிய வர்த்தக உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்படாத காரணத்தால் நேபாளம் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது.

இந்தக் கட்டத்தில்தான் இந்திய அரசு 'டிமார்ச்' அறிவித்தலை நேபாள அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இராஜதந்திர பாஷையிலான இந்த அறிவித்தல் இறுதி எச்சரிக்கையாக கணிக்கப்படுகிறது.

இதே வேளை—

இந்திய, நேபாள வெளியுறவு அமைச்சர்கள் இரகசியமாகக் கூடிப் பேசுகின்றனர் என்ற செய்தியை 'கற்பனை' என்று இந்திய அரசு மறுதலித்திருக்கிறது.

எங்கும், எப்போதும், எந்நேரத்திலும் இந்தியா நேபாளத்துடன் பேசத் தயாராக உள்ளது.

ஆனால் நேபாளம்தான் இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்துவதா, இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்காமல் உள்ளதாக இந்தியா தெரிவித்திருக்கிறது. (எ)

# பனாமா அரசியல் நெருக்கடி அமெரிக்க அதிபர் தலையீடு!

வாஷிங்டன், மே 10

பனாமா ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் கிலேர்மோ எண்டாரா வெற்றியீட்டியதை கௌரவித்துப் பதவி விலகும்படி தற்போதைய ஜனாதிபதி நொரியாகோவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தேர்தலைக் கண்காணிக்கச் சென்ற சுயேச்சையான பிரமுகர்கள் ஜெனரல் நொரியாகோ தேர்தல் மோசடியில் ஈடுபட்டார் என்றும் எதிர்க்கட்சி வேட்பாளரே அமோக வெற்றியீட்டினார் என்றும் அறிவித்துள்ளனர்.

இதனிடையில்— பனாமாவின் ஆயுதப்படையினரை ஜெனரல் நொரியாகோ உஷார் நிலையில் வைத்துள்ளார். (எ)

### 400 மைல் நினைவு ஓட்டம்

பிரிட்டனில் லொக்கர்பி நகருக்கு அருகே கடந்த டிசம்பரில் அமெரிக்க போஜிங் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 259 பயணிகள் பலியானார்கள் அல்லவா!

அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக அவர்கள் நினைவாக 4 பேர் ஓட்டப்பந்தயம் ஒன்றை நடத்தினர்.

லண்டனில் புறப்பட்டு 400 மைல் ஓடி கிளாஸ்கோ நகரை அடைந்தனர். அங்கிருந்து அவர்கள் லொக்கர்பி நகருக்குச் சென்று தங்களது ஓட்டத்தை முடித்துக் கொள்வர். (எ)

### காஷ்மீர் அரசியல்:

# துப்பாக்கியுடன் காணப்படும் போராளிகள் சுடப்படுவர்

### பரூக் அப்துல்லா எச்சரிக்கை

காஷ்மீர் போராளிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்று காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா கேட்டுக் கொண்டார்.

காஷ்மீரில் தனிநாடு கோரி போராடும் போராளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி முதலமைச்சர் அப்துல்லா பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவு இட்டார்.

கையில் துப்பாக்கியுடன் திரிபவர்கள் சுட்டுக்கொல்லப் படுவர் என்று முதலமைச்சர் எச்சரித்தார்.

சீக்கியத் தீவிரவாதிகளுக்கு உதவப்போவதில்லை என்று பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ பிரதமர் காந்திக்கு உறுதியளித்திருக்கின்றார். அது போன்று காஷ்மீர் பிரச்சினையிலும் அவர் உறுதியளிக்க வேண்டும் என்று ஜனாப் பரூக் அப்துல்லா சொன்னார்.

பஞ்சாபில் காலிஸ்தான் இயக்கம் முடிந்து விட்டது. பஞ்சாப் நிலை காஷ்மீரில் இடம் பெற அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

### ★ ஹங்கேரி அரசியல்

# 1956 புரட்சியை நடத்திய பிரதமர் நாகியின் உரை மீண்டும் வானொலியில் ஒலிபரப்பு

புடாபெஸ்ற், மே 10

ரஷ்யாவிற்கு எதிரான 1956 புரட்சியின்போது கொல்லப்பட்ட ஹங்கேரி பிரதமர் இம்ரே நாகியின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரை ஒன்று புடாபெஸ்ட் வானொலியில் ஒலி பரப்பப்பட்டது.

நாகியின் பேச்சுக்களை ஒலிபரப்ப ஹங்கேரி கம்யூனிஸ்ட் அரசு தடை விதித்து இருந்தது.

அத்தடை 33 ஆண்டுகளின் பின்னர் நீக்கப்பட்டது.

1956 புரட்சியின் போது சோவியத் படைகள் புடாபெஸ்ற் நகரினுள் பிரவேசித்த சமயம் பிரதமர் என்ற முறையில் திரு. இம்ரேநாகி வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். 4- 11- 1956 அன்று நிகழ்த்தப்பட்ட அந்தப் பேச்சில்:

''எமது தலைநகரைத்தாக்க சோவியத் படைகள் வந்து கொண்டிருக்கின்றன.

''சட்டபூர்வமான ஜனநாயக ஹங்கேரி அரசைக் கவிழ்க்கவே இப்படைகள் வருகின்றன.

''எமது துருப்புக்கள் எதிர்த்துப் போராடுகின்றன. இந்த உண்மையை எனது நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் இத்தால் அறிவிக்கின்றேன்''

இப்படி திரு. நாகே அன்று நிகழ்த்திய பேச்சின் ஒலிப்பதிவு நாடா புடாபெஸ்ற் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

திரு. நாகியின் 1956 புரட்சியை மக்கள் புரட்சி என்று இன்றைய ஹங்கேரி கம்யூனிஸ்ட் அரசு வர்ணிக்கின்றது.

நாகியின் பின்னர் பதவிக்கு வந்த அதிபர் ஜனோஸ்கடார் கடந்த ஆண்டு மே மாதம் பதவியில் இருந்து விலக்கப்பட்டார்.

அதன் பின்னரே நாகிக்கு ஹங்கேரி அரசியலில் 'புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளது. (எ)

# ஒரிஸ்ஸா காங்கிரஸில் பிளவு; முதலமைச்சருக்கு எதிர்ப்பு!

ஒரிஸ்ஸா முதலமைச்சர் ஜே. பி. பட்நாயக்கை அகற்றும்படி மாநில காங்கிரஸ் எம். எல். ஏக்களின் ஒரு பகுதியினர் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

பட்நாயக்குப் பதில் வேறு ஒருவரை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் அதிருப்தியாளர் வலியுறுத்தி வருகின்றனர்.

பிரதமர் ராஜீவ் காந்தி மே 15இல் ஒரிஸ்ஸாவுக்கு விஜயம் செய்கிறார், (எ)

### சலுகைகள் என்ற பெயரில்

# சட்ட விரோதமான செயல்களை நியாயப்படுத்துவதற்கு முயற்சி

### அடகு வைத்தோர் சங்கம் அறிக்கை

பலாலி, மே 11

'சலுகைகள் என்ற பெயரில் அநீதியையும் சட்டவிரோதமான செயல்களையும் நியாயப்படுத்தி அடகுநகைகளின் வட்டிப்பணத்தை அறவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் அரசாங்கம் நடந்துகொள்வதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனை எதிர்த்து எமது சங்கம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் மக்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்'.

நகை அடகுவைத்தோர் சங்கம் அறிக்கைமூலம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நகை [illegible] கம் தொடர்ந்து விடுத்துவந்த கோரிக்கைகளுக்கு முதன்முதலாக நிதியமைச்சர் தனது அமைச்சின் செயலாளர் மூலம் பதில் அளித்திருக்கிறார்.

இப்பதிலில் மக்கள் வங்கி 31-3 89 தொடக்கம் அடகு வைத்தோருக்குச் சலுகைகள் அளித்திருப்பதாகவும் அடகு நகைகளுக்குப் பணம் செலுத்தும் திகதியை 30-6-89 வரை நீடிக்கும்படி அமைச்சர் மக்கள் வங்கியைப் பணித்ததாகவும் கூறப்படுகின்றது.

அளிக்கப்பட்டிருக்கும் சலுகைகள்யாவும் அதே சலுகைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் 5 ஆவது சலுகை மாத்திரம் முதலுக்கு மேல் வட்டி 4-4-88 தொடக்கம் அறவிடக்கூடாது என்று குறிப்பிடுகிறது.

ஆகவே இச்சலுகைகள்எந்த வகையிலும் நீதியை வழங்குவதாக அமையா. மக்களுக்காக உருவாக்கப்பட்ட மக்கள்வங்கி தனது குறிக்கோளை மறந்து கடும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் 'சைலொக்' காக மாறிவிட்டது போலத் தோன்றுகின்றது.

எமது சங்கம் நீதிகிடைக்கும் வரை தொடர்ந்து எடுக்கும் நடவடிக்கைகளுக்கு சலுகைகளில் மயங்காது தொடர்ந்து ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்:

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-119]

### ஆதாரம் நீயல்லால் கௌரீசா யாருள்ளார்?

ராகம்:- ரஞ்சனி தாளம்:- ஆதி

**பல்லவி**

பார்த்திடல் வேண்டும் ஐயா - உன்னருளைச்
சேர்த்திடல் வேண்டும் ஐயா - என்னை நீ!
—(பார்த்......)

**அனுபல்லவி**

என்துன்பக் குரலின்னும் உன்காதில் வீழாதோ?
என்துன்பம் தீர்க்காது இருப்பதுன் அழகாமோ?
—(பார்த்......)

**சரணம்**

ஆதாரம் நீயல்லால் கௌரீசா யாருள்ளார்?
ஆதாரம் நீயென்றே என்னைநான் தந்தேனே!
ஆதாரம் இல்லார்க்கும் ஆதாரம் நீயன்றோ?
பாதார விந்தங்கள் தந்தென்னை ஆளாயோ?
— (பார்த்......)

— முருகு

(இன்று 11- 05- 89 திருக்கேதீச்சரம் கொடியேற்றம்)

### சமய சந்நிதிகளில்

## கோண்டாவில் சிவகாமி அம்பாள் ஆலய திருவிழா

கொக்குவில், மே 11

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

## உற்சவம்

கோப்பாய் மே 11

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (க- 72)

## நஷ்ட ஈடு கோரும் கசிப்பு உற்பத்தியாளர்கள்

காரைநகர், மே. 11

நஷ்ட ஈடு கோருகின்றார்கள் கசிப்பு உற்பத்தியாளர்கள்! இது காரைநகரில் நடந்துள்ளது.

அங்கு நடைபெற்று வரும் கசிப்பு ஒழிப்புப் போராட்டங்களினால் தம்முடைய, கசிப்பு தயாரிப்புடன் சம்பந்தப்படாத சில பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளன என்பதே அவர்களுடைய வாதம்.

அவர்கள் கிராமசேவையாளர்களிடமும் மற்றும் பொதுஸ்தாபனங்களிடமும் முறையிட்டு நஷ்ட ஈட்டைக் கோரியுள்ளார்கள் என அறிய வருகின்றது. (க- 73)

## நோய்களை அறுவைச்சிகிச்சை இன்றி யோகாசனத்தால் குணமாக்கலாம்

### யோகப் யிற்சி நிலைய அதிபர் உரை

கொக்குவில் மே 11

''அறுவகைச்சிகிச்சை மூலம் குணப்படுத்த வேண்டிய பல நோய்களை யோகாசனம் மூலம் எளிதில் குணப்படுத்தலாம்.

மூலவியாதி, சர்க்கரை வியாதி, தொய்வு, சிறுநீரகத்தில் கற்சேர்க்கை, அப்பென்டிசைற்றிஸ் போன்ற நோய்களை யோகாசனம் மூலம் குணப்படுத்தக்கூடியதாக இருப்பதுடன் நோய்கள் வராமல் தடைசெய்யவும் யோகாசனப் பயிற்சி உதவுகின்றது''

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற யோகப் பயிற்சி நிலைய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ்ப்பாண யோகப்பயிற்சி நிலைய அதிபர் திரு. வ. சண்முகம் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாண யோகப்பயிற்சி நிலைய நிர்வாகி சட்டத்தரணி த. சோமசுந்தரம் பேசுகையில்;

''விரைவில் இந்நிலையத்திற்கென நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு பயிற்சிகள் விஸ்தரிக்கப்படும். இங்கு பயிற்சி பெறுபவர்களில் திறமை மிக்கவர்கள் மேலதிகப்பயிற்சிக்காக இந்தியா அனுப்பி வைக்கப்படுவார்கள்.

அவர்களின் வழிகாட்டல்களின் கீழ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மேலும் பல யோகப்பயிற்சி நிலையங்கள் பலபாகங்களிலும் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பிரதம விருந்தினராக மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா கலந்து கொண்ட இவ்வைபவத்தில் திரு. ஈ. சுப்பிரமணியம் உரையாற்றினார்.

யாழ். வர்த்தகர் சங்கத்தலைவர் திரு. ஆ. க. நடராசா நன்றியுரை கூறினார். (க-96)

## நிவாரண வேலை

புதுக்குடியிருப்பு, மே 11

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர்பிரிவில் பொருளாதார உதவி4ஆயிரம், மீளக்குடியிருப்பு உதவி 2 ஆயிரம் ஆகிய நிவாரண வேலைகள் 90 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளது.

புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் சகலருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய பகுதிகளில் மட்டும் சிலருக்கு வழங்கப்படுவதில் சில சிரமங்கள் இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (க-126)

# ராம ஜென்ம பூமி தகராறு மேல்நீதிமன்ற விசாரணைக்கு

புதுடில்லி, மே 10

ராமஜென்ம பூமித் தகராறு மே நீதிமன்ற விசாரணைக்கு விடப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் அயோத்தியா ராமர் பிறந்த இடம் உண்டு. அந்த இடத்தில் இஸ்லாமிய பள்ளிவாசல் ஒன்றும் உண்டு.

அந்த இடத்தைத் தங்களின் புனித தலமாக முஸ்லிம்களும் இஸ்லாமியரும் கருதுகின்றனர்.

இப்போது இத்தகராறு பற்றி மேல்நீதிமன்றம் விசாரணை நடத்தி முடிவு செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது. [எ]

# ராமமூர்த்தியை பதவி இறக்க மூப்பனார் கோஷ்டி முயற்சி!

சென்னை, மே 10

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து வாழப்பாடி இராமமூர்த்தியை அகற்ற மூப்பனார் கோஷ்டி மீண்டும் ஈடுபட்டிருக்கிறது. இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏக்கள் 20 பேர் இது சம்பந்தமாக பிரதமர் காந்தியைச் சந்திக்க புதுடில்லி சென்றனர்.

மீண்டும் திரு. மூப்பனாரையே தமிழ்நாடு பிரிவின் தலைவராக நியமிக்க வேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கை.

இதனிடையில் தமிழ்நாடு காங்கிரஸின் ஏழு பொதுச் செயலாளர்களின் பெயர்களை திரு.இராமமூர்த்தி அறிவித்திருக்கிறார். (எ)

## ஒரு கோடி ரூபா தங்கம் பறிமுதல்

லிமா, மே 10

இந்தியப்பணத்தில் 1 கோடி ரூபா பெறுமதியான தங்கம் சென்னையில் கடந்த ஞாயிறு இரண்டு தனித்தனி தேடுதல்களின் போது அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

கடத்தப்பட்டு கொண்டு வரப்பட்ட தங்கத்தின் எடை 29 கிலோகிராம் என்று கூறப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B. நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.

# உதயன்

11 - 05 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடைவைகள்
★ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

# எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள மனித அடிப்படை உரிமைகள் குழு

## சிறிமாவோ தலைவராகத் தெரிவானுர்

கொழும்பு, மே 11

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சேர்ந்து 'மனித அடிப்படை உரிமைகள் குழு' ஒன்றை அமைத்துள்ளனர்.

குழுவின் தலைவராக எதிர்க் கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவானுர்.

ஐக்கிய சோஷலிச அணி எம். பி திரு. அத்தாவுட, திருமதி பண்டாரநாயக்காவின் பெயரைப் பிரேரித்தார். கூட்டணி எம். பி. திரு. அமிர்தலிங்கம் அதனை ஆமோதித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பி.தினேஷ்குணவர்த்தன, ஐ. சோ. அணி எம். பி அத்தாவுட செனவிரத்ன, கூட்டணி எம். பி. திரு. அமிர்தலிங்கம் ஆகியோர் உபதலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தென் மாகாண சுதந்திரக் கட்சி எம். பி. திரு. மஹிந்த ராஜபக்ஷ பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எம். பிக்களான திரு. கந்தையா நவரத்தினம் திரு. வாசுதேவ நாணயக்காரா ஆகியோர் உப தணுதிகாரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

11 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பின்வரும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன:-

★ இப்படி ஓர் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது என்பதை சர்வதேச அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்துவது.

★ பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் விபரங்களை, கைதான அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் கமிட்டிக்கு அறிவிக்கும்படி ஜனுதிபதியைக் கோருவது. [ஒ-எ]

## ஜெயலலிதா பற்றி காளிமுத்து எழுகிய புத்தகம் வாபஸ்!

மதுரை, மே 10

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. வில் முன்னுள் அமைச்சர் கே. காளிமுத்து மீண்டும் சேர்ந்துவிட்டார் அல்லவா!

அதைத் தொடர்ந்து அவர் எழுதிய 'புரட்சி மலர்கள்' என்ற புத்தகம் விற்பனை செய்வது நிறுத்தப்பட்டது.

ஜானகி அணியில் இருந்த போது 'அண்ணு' நாளிதழில் திரு. காளிமுத்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

இந்த நூலில் திரு. காளிமுத்து ஜெயலலிதாவைக் காரசாரமாகத் தாக்கி எழுதியிருந்தார்.

ஒரு சில கட்டுரைகள் ஆபாசத்தைத் தொடுபவையாகவும் அமைந்திருந்தன. ஜெயலலிதாவின் தனிப்பட்ட வாழ்க்கையையும் காளிமுத்து அதில் விமர்சித்திருந்தார்.

காளிமுத்து மீண்டும் சேர்ந்த பின்னர் இப்புத்தகம் தொடர்ந்து விற்கப்படுவது காளிமுத்துவின் குற்றச் சாட்டுக்களுக்கு நம்பகத் தன்மையைப் பெற்றுக் கொடுத்துவிடும் என்று ஜெயலலிதா அணியினர் கருதினர்.

ஜெயலலிதா பற்றி காளிமுத்து எழுதியுள்ள ஏனைய புத்தகங்களும் இனி விற்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சமாதான முயற்சியைக்...,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் சந்தேகம் இல்லை.

ஆகவே இச்சமாதான முயற்சிக்கு போதிய ஒத்துழைப்பை வழங்குவது சகல பிரசைகளினதும் தலையாய கடமை.

எமது தாய்நாட்டில் அமைதியும் சகஜ நிலையும் ஏற்பட வேண்டும் என்பதே சகலரினதும் அவா. எந்த ஒரு நபரும் குழுவினரும் அல்லது கட்சியினரும் இம் முயற்சிக்குத் தடையாகவோ அல்லது குறிக்கோளை அடைவதற்கு இடையூருகவோ எதையும் செய்ய மாட்டார்கள் என்று நாம் மனப்பூர்வமாக நம்புகின்ருேம்.

இதுவரை பல தீவிரவாதக் குழுக்கள் ஜனநாயக அமைப்பில் சேர்ந்து கொண்டுள்ளன என்பது குறித்து மகிழ்ச்சி அடைகின்ருேம். ஜனநாயக அமைப்பையும் ஜனநாயக முறையிலான அரசையும் வலுப்படுத்துவதற்கு நாம் எம்மால் இயன்ற சகலவற்றையும் செய்யவேண்டும்.

தம்மால் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ அறிக்கைகளை மாத்திரமே கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி இருதரப்பினரும் ஏற்கனவே பொதுமக்களுக்கும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தேவையற்ற ஊகங்களுக்கும் கற்பனை ரீதியிலான வியாக்கியானங்களுக்கும் நாம் இடமளிக்காவிட்டால் சமாதான முயற்சிகளுக்கு அது பெரிதும் உதவும். —இப்படி அமைச்சர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ-எ)

## அனுமதி மறுப்பு

அமிர்தசரஸ், மே 10

தடுத்து வைக்கப்பட்டுள்ள சீக்கியத் தலைவர் குருச்சரன் சிங் தோஹ்ராவைச் சந்திக்க ஹரியாணுமுதலமைச்சர் தேவிலாலுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை. (எ)

EXHIBITION

Chundikuli Girls' College

Dr. E. M Thilliampalam Vacational Training Institute

An Exhibition on Needle work, Bridal Bouquets, Iced Cakes, Structure Cakes, Pot Painting, Macrame and Handicraft will be held on 11th, 12th, and 13th May 1989 between 9-00 a. m. and 6-00 p. m.

Those who wish to join the above course, which is due to commence shortly for the new batch can also give in their names.

(C2503 PRINCIPAL.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை வள்ளியம்மை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சங்கரப்பிள்ளை வள்ளியம்மை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் மனைவியும், கிருஷ்ணபிள்ளை (தபாலகம் – அக்கராயன்குளம்) முத்துக்குமாரு (பிரதேச சபை, கொக்குவில்) கண்மணி, காலஞ் சென்ற பராசக்தி, செல்வமணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் 11-05-1989 வியாழன் மாலை 4 மணியளவில் ஸ்கந்தபுரத்தில் நடைபெறும்.

தகவல்;
ச. முத்துக்குமாரு

(10885)

## அந்தச் சத்தம் இதுதான்!

குருநகர், மே 11

யாழ். நகரப் பகுதியில் நேற்றுக் காலை அடுத்தடுத்து குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. இந்தச் சத்தங்களைக் கேட்டு மக்கள் கலங்கிப் போய் இருந்தனர்.

காலாவதியான குண்டுகளைப் படையினர் கடற் பகுதியில் வைத்து வெடிக்க வைத்ததாலேயே சத்தங்கள் எழுந்ததாகப் பின்னர் தெரிய வந்தது. (ஒ-51)

## தமிழ் அமைப்புகள் மாநாடு நடக்கும்?

புதுடில்லி, மே 11

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோரிக்கைகள் பற்றி பரிசீலனை செய்வதற்காக ஜனுதிபதி பிரேமதாஸா சகல தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றை மாநாடு ஒன்றுக்கு அழைக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிகிறது.

கொழும்பில் இருந்து யு.என்.ஐ. செய்தியாளர் முன்கண்டவாறு தெரிவித்திருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

## வெளிவாரிப்பட்டதாரிகளையும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களையும் திணைக்களத்துக்கு நாளைவர அழைப்பு

யாழ்ப்பாணம், மே 11

யாழ் கல்வித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி பின்வரும் வெளிவாரிப் பட்டதாரிகளையும் கணித விஞ்ஞான ஆசிரியர்களையும் நாளை 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்திற்கு சமுகம் தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### வெளிவாரிப் பட்டதாரிகள்

வெளிவாரிப் பட்டதாரிகளான திருமதி எஸ். நவநாயகி நயினுதீவு, திருமதி பீ. யோகேஸ்வரி நயினுதீவு, திருமதி எஸ். நாகேசு நயினுதீவு, திரு. ஆர். திரவியநாதன் நயினுதீவு, திரு.பி. தர்மராசா வேலணை,

திருமதி வீ. அமரஜோதி நெடுந்தீவு, செல்வி பி. பாமா நயினுதீவு, திரு. கே. ஆர். சிவலிங்கம் ஊர்காவற்றுறை, சகோதரி ருேஸ்மலர் யாழ்ப்பாணம் ஆகியோரையும் —

### கணித விஞ்ஞான ஆசிரியர்கள்

கணித விஞ்ஞான ஆசிரியர்களாகிய செல்வி எம். கோகுலராணி மீசாலை, செல்வி எஸ். கலைவாணி புலோலி கிழக்கு, செல்வி எஸ். ஜெயவானி சாவகச்சேரி, செல்வி என். பிரேமலலிதா புங்குடுதீவு, செல்வி ஆர். பத்மினி கொக்குவில் கிழக்கு,

செல்வி எம். மேரி ரஞ்சினி பருத்தித்துறை, செல்வி வீ. சுலோசனு கலட்டி, செல்வி கே ஜெயந்தி சரவணை, திரு. என். என். ஏப்ரகாம் பாசையூர் ஆகியோரையும்—

கல்விச் சான்றிதழ், நற்சான்றுப் பத்திரம், பிறப்புச் சான்றுப் பத்திரம், தேசிய அடையாளக் கார்ட் ஆகியவற்றுடன் திணைக்களத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-க)

## நல்லூரில் பெண் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், மே 11

நேற்று மாலை நல்லூர் அரசடி வீதியில் பெண் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானுர்.

செய்தி அச்சுக்குப் போகும் வரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

### இணுவிலில்

இதேவேளை இணுவிலில் நேற்றுப் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் யாழ். வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. [ஒ-9]

## சென்ஜோன்ஸ்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வைக்கப்பட்டிருந்தது.

மேலே ஏறி வந்தவர் தந்தையாரை கீழே வரும்படியும் கதைக்க வேண்டும் என்றும் கூறினுராம்.

கீழே நின்றவர்களிடம் துப்பாக்கியைக் கண்ட தந்தையார் அலுவலகத்துக்கு வந்து கதைக்கும்படி கூறிவிட்டு அங்கிருந்து சாதுரியமாகத் தப்பிச் சென்று விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்போது காலஞ்சென்றவர் நித்திரையால் எழுந்து அறையில் இருந்து வெளியே வந்தார். இவரை யார் என்று இளைஞர்கள் கேட்டனர். அவர் மகன் என்று பதில் அளித்தார்.

மாலை 5.00 மணி அளவில் நல்லூர் கந்தசாமி கோயில் பின் வீதிக்கு தகப்பனுர் வந்தால் மகனை விடுவிப்பதாகக் கூறி அந்த இளைஞர்கள் மகனை அழைத்துச் சென்றனர்.

இவர் அழைத்துச் செல்லப்பட்டு 15 நிமிடத்துக்குள் சுடப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

காலஞ்சென்ற திரு.எஸ்.ரி. அகிலன் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டியின் உப காப்டனுகவும், பாடசாலை மாணவர் தலைவனுகவும் இருந்தார்.

மற்றும் பல சமூகநல ஸ்தாபனங்களில் பொறுப்புள்ள பதவிகளையும் வகித்து வந்தார்.

இவரது ஈமச்சடங்குகள் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்குக் கோயில் வீதியில் உள்ள இவரது இல்லத்தில் இடம்பெறும்.

## தென்பகுதி வன்செயல்கள்

கொழும்பு, மே 11

தென் பகுதியில் இடம் பெற்ற சில வன்செயல்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

★ கேகாலையில் கொட்டியாக்கும்புற என்னும் இடத்தில் முன்னுள் தபால் அதிபர் ஒருவர் இரண்டு இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ பயாகலையில் சி. ரி. பெர்ணுண்டோ என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மித்தெனியாவில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

★ திஸ்ஸமஹாரகம என்னும் இடத்தில் இரண்டு பேர் இனந்தெரியாதவர்களால் கத்தியால் குத்தப்பட்டனர். ஒருவர் பின்னர் மரணமானுர்.

★ கட்கடுாஸ்தோட்டையில் சாராயத் தவறணை ஒன்றை இனந்தெரியாதவர்கள் கொள்ளை அடித்தனர். பின்னர் கைக்குண்டு வீசி கட்டடத்தைச் சேதப்படுத்தினர்.

★ நுவரெலியாவில் ஆயுதந்தரித்தவர்கள் ''கொலை செய்வோம்'' என்று பயமுறுத்தி செல்வந்தர் ஒருவரிடமிருந்து 5 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தனர். [ஒ-எ]

## சிங்கள....

தார்.

இதற்கமைய சிங்கள அகதிகளை சீனக்குடா முகாமுக்கு அனுப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுவந்தன.

எனினும் கடந்த சனிக்கிழமை ஜனுதிபதி விடுத்த இடைநிறுத்த உத்தரவைத் தொடர்ந்து இடமாற்ற நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

## ரிசேர்வ் பொலீஸ் உயிரிழப்பு

கொழும்பு, மே 11

சிவனெளிபாத மலையை அண்டிய பகுதியில் ரோந்து சென்ற பொலீஸார் மீது நேற்று தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொலீஸ் ஜீப்மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒரு றிசேர்வ் பொலீஸ் கொல்லப்பட்டார்.

இதேவேளை கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடொன்றில் பெரிய அளவிலான திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அங்கு களவாடப்பட்டன. (ஒ-9

## இந்தியா தொடர்ந்து பரிசீலனை


புதுடில்லி, மே 11

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுக்களின் முன்னேற்றத்தை இந்திய அரசு தொடர்ந்து பரிசீலித்து வருகிறது.

இத்தகவலை புதுடில்லி ராஜ்ய சபாவில் வெளியுறவு இணை அமைச்சர் [illegible] சிங் தெரிவித்தார்.

ஏற்கனவே தெரிவித்தபடி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கட்டமைப்பிற்குள் இலங்கையின் பொது அரசியல் நீரோட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக்கொண்டுவர நடைபெறும் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவாக உள்ளது என்றும் திரு நட்வர் சிங் தெரிவித்தார். [ஒ-எ]

## மரண அறிவித்தல்கள்



### அகிலன் திருச்செல்வம்

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி உயர் வகுப்பு மாணவனும், மாணவர் தலைவனுமான அகிலன் திருச்செல்வம் நேற்றுக்காலை அகால மரணமானுர். இவர் திருச்செல்வம் (ஆசிரியர், முரசொலி) ரஞ்சிதமலர் ஆசிரியை [சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்] ஆகியோரின் அருந்தவப் புதல்வனும், இந்திராதேவி [பவா], அருள்மணிதேவி [சமநல சேவை நிலையம் நல்லூர்], கிரியாதேவி, விமலநாதன் [கணக்காளர்- முரசொலி] பாலசிங்கம் ஆகியோரின் அன்புக்கினிய மருமகனும் திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி வி. சி. சின்னத்துரை தம்பதிகளின் ஆசைப் பேரனும், அங்கை, அபிதா, ஆர்த்தி ஆகியோரின் பாசம் மிக்க அண்ணனுமாவார்.

செல்வன் அகிலனின் பூதவுடலுக்கு இன்று [11. 05. 89] காலை 9 மணி முதல் அவரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்துக்கு காலை 11 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: தந்தை, தாய்

123/1 கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

(C/2468)

### வ. மகாலிங்கம் B.A, L.L.B.

(சட்டத்தரணி)

முன்னைநாள் உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியரும் யா / நெல்லியடி மத்திய மகாவித்தியாலய துணை அதிபரும், பருத்தித்துறை நீதிமன்றச் சட்டத்தரணியும், பிரபல பத்திரிகையாளருமான திரு. வல்லிபுரம் மகாலிங்கம் சட்டத்தரணி அகால மரணமானுர். அன்னுர் கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், மாலதி, இளங்கோவன் [டுபாய்], மாதவி கோபாலன் (கணேசலிங்கம் அன் கோ), அனுலா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேந்திரன் (பொறியியலாளர் G. E. S. Pvt Ltd), நமசிவாயம் (நீர்ப்பாசனத் திணைக்களம், முருங்கன்), பாலச்சந்திரராஜன் (American-Express Bank கொழும்பு), ரஞ்சினி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னுரின் இறுதிக் கிரியைகள் 11. 5. 89 வியாழன் அவரது இல்லத்தில் நடைபெற்று பி. ப. 3 மணிக்குப் பூதவுடல் கரவை சோனப்பு மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம. சிவபாக்கியம்.

கன்பொல்லை வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

[10888]

### மினுசித்தம்பி சின்னையா (தம்பாபிள்ளை)

வவுனியா தாண்டிக்குளத்தைச் சேர்ந்த மினுசித்தம்பி சின்னையா (தம்பாபிள்ளை) காலமானுர். இவர் சிவபாக்கியவதியம்மாவின் அன்புக் கணவரும், பாலசுந்தரம் (அரசினர் பண்ணை கிளிநொச்சி) சிவபாதசுந்தரம் (விவசாய இலாகா, வவுனியா) கேதீஸ்வரி, ஜெகதீஸ்வரி (அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை) விக்னேஸ்வரி, (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்) ரவீந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனேந்திரன், மகாதேவன், தவராஜா (உதவி தபாலதிபர் வவுனியா] மாவேந்திரி, திருமகள் ஆகியோரின் மாமனுரும் ஆவார்.

அன்னுரின் பூதவுடல் 11-5-89 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் பத்தினியார் மகிழங்குளம் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்:
சி. சிவபாதசுந்தரம்

'தாயகம்'
தாண்டிக்குளம்,
வவுனியா,

(398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 11—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது